



கன்னியாகுமரி மாவட்டத்தில், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண பணிகள் குறித்து, இன்று (05.12.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஊரக வளர்ச்சித்துறை,
கூடுதல் முதன்மை அரசு கூடுதல் தலைமைச்செயலர் திரு. ஹான்ஸ் ராஜ்வர்மா இ.ஆ.ப, மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அரசுச்செயலர் திரு. சாய்குமார் இ.ஆ.ப.,
வேளாண்மைத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., கண்காணிப்பு அலுவலர் திரு. டி.கே.இராமச்சந்திரன் இ.ஆ.ப., கூடுதல் கண்காணிப்பு
அலுவலர் திரு. டி. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. பிரகாஷ் இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை இயக்குநர்
திரு. பாஸ்கரன் இ.ஆ.ப., ஆகியோர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்துத்துறை
உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்கள்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட நீரோடி மீனவ கிராமத்தில் நடைபெற்று வரும் சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். உடன் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.



கன்னியாகுமரி மாவட்டம் அரசு சுற்றுலா மாளிகையில் இன்று (10.12.2017) மாண்புமிகு மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் திரு.பொன்.இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுசீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்வது தொடர்பான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இதில்மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்பத்துறை முதன்மைச்செயலாளருமான திரு.டி.கே.ராமச்சந்திரன்.இ.ஆ.ப., கூடுதல் கண்காணிப்பு அலுவலரும் தொழில்துறை முதன்மைச் செயலாளருமான முனைவர்.ராஜேந்திரகுமார்.இ.ஆ.ப., வேளாண்மைத்துறை முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி.இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திருமதி.ஜோதி நிர்மலாசாமி.இ.ஆ.ப., மீன்வளத்துறை இயக்குநர் திரு.வி.பி.தண்டபாணி இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான்.இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒகி புயலால் பாதிக்கப்பட்ட தூத்தூர் மீனவ கிராமத்தில் இன்று (10.12.2017) வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர், கரை திரும்பாத மீனவர்களின் இல்லங்களுக்கு சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



கன்னியாகுமரி மாவட்டத்தில், ஓகி புயலால் பாதிக்கப்பட்ட தூத்தூர் மீனவ கிராமத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் போதுமான மருந்து இருப்புகள் குறித்தும், போதுமான மருத்துவ உபகரணங்கள் குறித்தும் கூடுதல் கண்காணிப்பு அலுவலர் முனைவர் திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.





கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சுற்றுலா, கடலோர காவல்படை
, காவல்துறை மற்றும் வருவாய்த்துறை சார்ந்த உயர் அலுவலர்களின் ஓகி புயலால் காணாமல்
போன மீனவர்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம் ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலர், திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா,இ.ஆ.ப.,
அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை அரசு
செயலர் திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை
அரசு செயலர் திரு.கோபால்,இ.ஆ.ப, வருவாய்த்துறை அரசு
செயலர் திரு.சந்திரமோகன்,இ.ஆ.ப, கண்காணிப்பு
அலுவலர் டி.கே.ராமச்சந்திரன் இ.ஆ.ப, கூடுதல் கண்காணிப்பு
அலுவலர் திரு.டி.ஜகந்நாதன்,இ.ஆ.ப, ஊரக வளர்ச்சி முகமை
இயக்குநர் திரு.பாஸ்கரன்,இ.ஆ.ப, வேலைவாய்ப்பு பயிற்சித்துறை
இயக்குநர் திருமதி.ஜோதி நிர்மலா சாமி இ.ஆ.ப, மாவட்ட
ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப, தென் மண்டல காவல் துறை
தலைவர் திரு.சைலேஷ் குமார் யாதவ்,இ.கா.ப,இந்திய கடலோர காவல்படை
அலுவலர் திரு.பால் லெஸ்லி, கப்பல்படை
கேப்டன் திரு. விஷால் குப்தா, துணை தேசி அலுவலர் திரு.விஜய் சர்மா ஆகியோர் உடன்
உள்ளனர்.




கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட மார்த்தாண்டன்துறை மீனவ கிராமத்தில் நடைபெற்று வரும் தூய்மைப்பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். உடன் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன்தீப்சிங் பேடி இ,ஆ,ப., அவர்கள் உள்ளார்



கன்னியாகுமரி மாவட்டம் நீரோடி பகுதியில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று (06.12.2017) வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை
அரசு முதன்மை செயலாளர் திரு.ககன்தீப்சிங் பேடி.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, மீனவ பிரதிநிதிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.
உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்.இ.ஆ.ப., அவர்கள், சார் ஆட்சியர் திரு.இராஜகோபால் சுங்கரா.இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.டி.கே.ராமச்சந்திரன்,இ.ஆ.ப, கூடுதல் காண்காணிப்பு அலுவலர் திரு.டி.ராஜேந்திரகுமார்.இ.ஆ.ப., வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி.இ.ஆ.ப., வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் திருமதி.பி.ஜோதி நிர்மலா சாமி,இ.ஆ.ப, கூடுதல் இயக்குநர் மீன்வளத்துறை திரு.சமீரன்,இ.ஆ.ப, மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., ஆகியோரிடம் கோட்டார் மறை மாவட்ட ஆயர் திரு. நஸ்ரான் சூசய் அவர்கள் மீட்புப்பணிகள் குறித்து சந்தித்து பேசியபோது எடுத்தபடம்.



கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் கிராமத்தில் மீனவ மக்களிடம் கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்பத்துறை முதன்மை செயலாளருமான திரு. டி. கே. இராமசந்திரன் இ.ஆ.ப., கூடுதல் கண்காணிப்பு அலுவலர் முனைவர் திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., வேளாண்மைத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப. , மாவட்ட கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., ஆகியோர் ஆறுதல் கூறி, மீனவர்களை தேடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து விளக்கினார்கள்



கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலின் தாக்கத்தினால் கடலில் திசைமாறி சென்ற மீனவர்களை மீட்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலோர காவல்படைக்குச் சொந்தமான கப்பலில் மீனவர்களை தேடும் பணிகளில் ஈடுபட்ட கன்னியாகுமரி மீனவர்களிடம் தேடுதல் பணியில் மீனவர் குழுக்களை ஈடுபடுத்துவது குறித்து இன்று (07.12.2017) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கண்காணிப்பு அலுவலர்கள் திரு.டி.கே.ராமச்சந்திரன்.இ.ஆ.ப., திரு.ராஜேந்திரகுமார்.இ.ஆ.ப, மற்றும் திருமதி.ஜோதிநிர்மலாசாமி.இ.ஆ.ப., ஆகியோர் கலந்துரையாடினார்கள். உடன் கடலோர காவல்படை அதிகாரி திரு.ரமேஷ்குமார் உள்ளார்.



கன்னியாகுமாரி மாவட்டம், ஒகி புயலால் சேதமடைந்து பாதிக்கப்பட்ட தச்சமலை மழைவாழ்மக்கள் குடியிருப்பு பகுதியை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.ராஹுல்நாத்.இ.ஆ.ப, அவர்கள் நேரில் பார்வையிட்டு குழந்தைகளுக்கு புத்தகம் மற்றும் உதவிகளை வழங்கினார்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஓகி புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைப்புப் பணிகள் குறித்து கண்காணிப்பு அலுவலர் திரு.டி.கே.ராமச்சந்திரன்,இ.ஆ.ப., கூடுதல் காண்காணிப்பு அலுவலர் திரு.டி.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி,இ.ஆ.ப., வருவாய்த்துறை அரசு செயலர் திரு.சந்திரமோகன்,இ.ஆ.ப., வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் திருமதி.பி.ஜோதி நிர்மலா சாமி,இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் மீன்வளத்துறை திரு.சமீரன்,இ.ஆ.ப., மற்றும் நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.சுரேஷ்ராஜன், கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆஸ்டின், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு.பிரின்ஸ் ஆகியோர் இன்று (7-12-2017)பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



இந்திய விமானப்படையினர் திருவனந்தபுரம் விமானப்படை தள விமானத்தின் மூலம், ஒகி புயலால் பாதிக்கப்பட்டு கரை திரும்பாத மீனவர்களை கடலில் தேடும் பணியில் ஈடுபட்டபோது எடுத்தபடம்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (07.12.2017) மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டி.கே.ராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திரு.டி.ராஜேந்திரகுமார்.இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில், மாவட்டத்திலுள்ள நகராட்சி, பேரூராட்சி, கிராம ஊராட்சி பகுதிகள் வாரியாக அனைத்து பகுதிகளிலும் சீரான மின்சார விநியோகம், குடிநீர் விநியோகம் வழங்க மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன், வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி.இ.ஆ.ப., வருவாய்த்துறை அரசு செயலர் திரு.சந்திரமோகன்.இ.ஆ.ப., வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் திருமதி.பா.ஜோதி நிர்மலா சாமி இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை இயக்குநர் திரு.பாஸ்கரன்.இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.பிரகாஷ்.இ.ஆ.ப., மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் குறித்த கணக்கெடுக்கும் பணிகள் நாகர்கோவில் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றுவருவதை வருவாய்த்துறை அரசுச்செயலாளர் திரு.சந்திரமோகன்.இ.ஆ.ப., மற்றும் மீன்வளத்துறை இயக்குநர் திரு.தண்டபாணி.இ.ஆ.ப., ஆகியோர் ஆய்வுசெய்தபோது எடுத்த படம்





